சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **246 / 2021**

பெயர்: அல்லி ம.சா. 1 தேதி **18.03.2025**

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது மகள் ஓட்டிச்சென்ற காரில் நானும், எனது பேரனும் உடன் பயணித்தோம். சம்பவம் நடைபெற்ற அன்று நாங்கள் கரூரில் இருந்து குளித்தலைக்கு வந்துக்கொண்டிருந்தோம். போலீசார் எனது மகள் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து நடைபெற்றதற்கான மாதிரி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் மாயனூர் காவல் நிலைய குற்ற எண். 128/2018 எண்ணுக்குரிய மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் எ.ம.சா.ஆ. 1 மற்றும் 2. மேற்படி வரைபடத்தில் விபத்தானது சாலையில் கிழமேல் பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இவ்வழக்கில் நாங்கள் பயணித்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ-3 ஆவணத்தின் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு எனது மகள் தான் காரணம் என்றால் சரியல்ல. அதனால் இரண்டாவது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது வருமானம் தொடர்பான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக சரியாகிவிட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.